# ஸ்ரீ கணேஷ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

Learn. Rise. Excel

காமராஜ் நகர் காலனி, அம்மாப்பேட்டை, சேலம்-636 014.
போன் : 0427-2242999, 6532244


## விதிமுறைகள்

ஸ்ரீ கணேஷ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் மாவட்டம் அம்மாப்பேட்டை, சேலம் மாநகராட்சியின் எல்லைக்குள் 2004-ம் ஆண்டு தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது. இக்கல்லூரி பெரியார் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற ஆண், பெண் இருபாலரும் பயிலும் சுயநிதி கல்லூரியாகும். மாணவ, மாணவியரின் கல்வி முன்னேற்றத்திற்காக சில ஒழுங்கு விதிமுறைகளை நிர்வாகம் ஏற்படுத்தியுள்ளது. அதை பெற்றோரும் மாணவ - மாணவியரும் அவசியம் கடைபிடிக்க வேண்டும். இவை அனைத்தையும் பெற்றோர் / பாதுகாவலர் படித்த பின்னரே மாணவ - மாணவியரை இக்கல்லூரியில் சேர்க்கின்றீர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மாணவ - மாணவியரின் விருப்பத்திற்கு ஏற்ப கல்லூரி ஒழுங்கு விதிமுறைகளை மாற்ற முடியாது. கல்லூரியில் சேர்த்தபின் கல்லூரி விதிமுறைகளை மீறும் மாணவ, மாணவியரைத் தற்காலிகமாகவோ (அ) நிரந்தரமாகவோ கல்லூரியை விட்டு வெளியேற்ற முதல்வருக்கு முழு அதிகாரம் உண்டு என்பதை இதன் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் சூழ்நிலைக்கு ஏற்ப மாணவ-மாணவியரின் முன்னேற்றத்திற்காக கல்லூரி நிர்வாகம் அவ்வப்போது புதிதாக நடைமுறைப்படுத்தும் ஒழுங்கு விதிமுறைகளையும் மாணவ-மாணவியர் கடைப்பிடிக்க வேண்டும். இவ்விதம் பெற்றோர்கள், மாணவ-மாணவியர்களின் முழு ஒத்துழைப்பை நாடும் - நிர்வாகம்.

நான் ...................................................... என் மகன் / மகள் .............................................ஐ ஸ்ரீ கணேஷ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 20............ - 20............ ஆம் கல்வியாண்டில் சேர்ப்பதற்காக .................................ஆம் தேதியன்று விண்ணப்பப் படிவம், தகவல் புத்தகம் மற்றும் விதிமுறைகள் படிவம் ஆகியவற்றை வாங்கினேன். கல்லூரி விதிமுறைகளை நானும் என் மகனும் / மகளும் படித்துத் தெரிந்துகொண்டோம். அதன்பின் முறையாக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து முதல்வரிடம் சமர்ப்பித்தோம். விதிமுறைகள் அடங்கிய நகலையும் பெற்றுக்கொண்டோம்.

நான் என் மகனை / மகளை ........................................................................... ஆம் தேதியன்று................................................. பாடப்பிரிவில் சேர்த்தேன். கல்லூரியின் கீழ்க்கண்ட விதிமுறைகளை நானும் என் மகனும் / மகளும் கடைப்பிடிப்போம் என உறுதியளிக்கின்றோம். மேலும் மாணவ, மாணவியர் நலன் கருதி வருங்காலத்தில் நிர்வாகம் கொண்டுவரும் புதிய விதிமுறைகளையும் கடைபிடிப்போம் எனவும் உறுதியளிக்கின்றோம். தவறினால் அதற்குப் பொறுப்பேற்க சம்மதிக்கின்றோம்.

1. மாணவ / மாணவியர், சக மாணவ-மாணவியரை ராக்கிங், ஈவ்டீஸிங் செய்யக்கூடாது. இச்செயல்களில் ஈடுபட்டால் சட்டபடி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2. மாணவ - மாணவியர் கல்லூரியில் நடைபெறும் அனைத்துத் தேர்வுகளையும் எழுத வேண்டும். தேர்வு எழுத முடியாத சூழ்நிலையில், முன்னதாகவே பெற்றோருடன் முதல்வரைச் சந்தித்துத் தேர்வு எழுத இயலாமைக்கான தகுந்த காரணத்தைக் கூறி எழுத்து வடிவில் அனுமதிபெற வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாதவரை கல்லூரிக்குள் அனுமதிக்க இயலாது. மாணவ, மாணவியரின் பல்கலைகழகத் தேர்வு முடிவுகள் அவரவர் பெற்றோர்களுக்கு தபால் மூலம் தெரிவிக்கப்படும்.

3. பல்கலைக்கழகத் தேர்வு எழுத பல்கலைக்கழக விதிப்படி மாணவ-மாணவியர்களுக்கு 75% வருகைப்பதிவு பெற்றிருக்க வேண்டும். மாணவ - மாணவியர் விடுப்பு எடுத்த நாள் பற்றி அவரவர் பெற்றோர்களுக்கு தபால் மூலம் தெரிவிக்கப்படும். மாணவ / மாணவியர் முற்பகல் மற்றும் பிற்பகல் பாட வேளைகளில் ஏதாவது ஒரு பாடவேளைக்கு வரவில்லை என்றால் அது ½ நாள் விடுப்பாகக் கருதப்படும்.

4. மாணவ - மாணவியர் விடுப்பு (Leave) எடுப்பதற்கு முன்பு அல்லது விடுப்பு முடிந்து கல்லூரிக்கு வந்தவுடன் வகுப்புப் பொறுப்பாசிரியரிடம் விடுப்புக் கடிதம் பெற்று அவர் அதில் குறிப்பிடும்

காலக்கெடுவுக்குள் (ஐந்து வேலைநாட்களுக்குள்) பெற்றோர் / பாதுகாவலர் எவரேனும் ஒருவரிடம் கையொப்பம் பெற்று, மீண்டும் ஒப்படைக்க வேண்டும்.

5. மாணவ / மாணவியர் வருடந்தோறும் நான்கு தவணைகளாக தங்கள் பருவக்கட்டணத்தை செலுத்த வேண்டிய விவரங்கள் :

முதல் தவணை - ஜுலை மாத இறுதிக்குள்
இரண்டாம் தவணை - செப்டம்பர் மாத இறுதிக்குள்
மூன்றாம் தவணை - டிசம்பர் மாத இறுதிக்குள்
நான்காம் தவணை - பிப்ரவரி மாத இறுதிக்குள் செலுத்தி விட வேண்டும்.

பல்கலைக்கழகத் தேர்விற்கு விண்ணப்பித்திருந்தாலும் இறுதியாக பல்கலைக்கழகத் தேர்வு எழுதும்போது நிர்வாகத்திற்கு செலுத்த வேண்டிய (பருவக்கட்டணம், சீருடைக்கட்டணம், புத்தகக் கட்டணம், விடுதி வாடகை, உணவுக்கட்டணம் மற்றும் ஆய்வகக் கட்டணம்) போன்ற அனைத்துக் கட்டணங்களையும் செலுத்தினால் மட்டுமே தேர்வு எழுத முடியும். மேற்படி கட்டணங்கள் அனைத்தையும், கல்லூரி நிர்வாகம் குறிப்பிடும் தேதியில் செலுத்த வேண்டும். தவறினால் காலதாமதமாகும் ஒவ்வொரு தவணைக்கட்டணத்திற்கும் நாள் ஒன்றுக்கு ரூ. 5/- வீதம் அபராதம் செலுத்த வேண்டும். அக்கட்டணமும் கால அவகாசம் கொடுக்கப்பட்ட தினங்களுக்குள் செலுத்த வேண்டும். மேற்படி கட்டணங்களைச் செலுத்தாத மாணவ மாணவியரின் பெயர்களை பெயர் பதிவேட்டிலிருந்து நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நீக்க நிர்வாகத்திற்கு அதிகாரம் உண்டு.

6. கல்லூரி நூலகத்தில் எடுக்கும் புத்தகத்தை, 15 நாட்களுக்குள் திருப்பி அளிக்க வேண்டும். நூலகத்தைப் பயன்படுத்தும் மாணவ / மாணவியர் அந்தந்தப் பருவத்தில் தங்களுடைய பல்கலைக்கழக இறுதித் தேர்வுக்குள், அனைத்துப் புத்தகங்களையும் நூலகத்தில் திருப்பி அளிக்க வேண்டும். மேலும் புத்தகத்தைக் கிழித்தாலோ, சேதப்படுத்தினாலோ, தவறவிட்டாலோ புதிய புத்தகம் அல்லது அதன் விலையோடு ஒன்றரை மடங்கு கட்டணத்தை கல்லூரி குறிப்பிடும் தேதிக்குள் செலுத்த வேண்டும்.

**7. கல்லூரியில் சேர்ந்த பின், வகுப்புகளுக்கு வருகைதந்தாலும் வருகைதராவிட்டாலும் எந்த ஒரு காரணத்திற்காகவும் செலுத்திய கட்டணங்களை திருப்பித்தர இயலாது. மேலும் மாணவ மாணவிகள் மாற்றுச்சான்றிதழ் கோரினால், அந்தக் கல்வியாண்டிற்குரிய அனைத்து பருவக் கட்டணங்களையும் செலுத்த வேண்டும்.**

**8. கல்லூரியில் சேர்ந்தலிருந்து படித்து முடித்து மாற்றுச் சான்றிதழ் வாங்கும் வரை தாங்கள் செலுத்திய தொகைக்கான இரசீதை கண்டிப்பாக வைத்திருக்க வேண்டும்.**

9. கல்லூரி வளாகம், கல்லூரி விடுதி மற்றும் கல்வி பணிக்காக வெளியே செல்லும் போது தீயபழக்க வழக்கங்களில் ஈடுபடகூடாது. மீறுவோர் கல்லூரியில் இருந்து தற்காலிகமாகவோ / நிரந்தரமாகவோ நீக்கப்படுவர்.

10. கல்லூரிக்குச் சொந்தமான அசையும், அசையா சொத்துக்களை மாணவ / மாணவியர் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யத்தவறினால் ஏற்படும் சேதாரங்களுக்கு மாணவ/மாணவியர்களே முழுப் பொறுப்பு ஆவார்கள்.

11. மாணவ/மாணவியர் அனைத்து ஆய்வுக்கூடங்களையும்,கல்லூரிப் பாடத்திட்டங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஆய்வுக்கூடங்களின் விதிமுறைகளைக் கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டும். அங்குள்ள உபகரணங்களையும், கருவிகளையும் உரிய கவனத்துடன் கையாள வேண்டும். ஆய்வகத்தில் ஏற்படும் சேதாரத்திற்கு மாணவ/மாணவியரே முழுப்பொறுப்பாவர்.

12. மாணவ – மாணவிகள் வகுப்பறை / தேர்வு அறை மற்றும் ஆய்வுக்கூடங்களில் தமக்கென ஒதுக்கப்படும் இடங்களில் மட்டுமே அமர வேண்டும். அவ்வாறே அமர்ந்து செய்முறைப் பயிற்சி செய்ய வேண்டும்.

13. வகுப்பறை, ஆய்வுக்கூடம், நூலகம், கருத்தரங்குக் கூடம் மற்றும் உணவுக்கூடம் (Canteen) போன்ற இடங்களுக்கு மாணவிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களுக்கு மாணவர்களோ, மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களுக்கு மாணவிகளோ செல்லக்கூடாது.

14. மாணவ / மாணவியர் வகுப்பறையில் ஆசிரியருக்கு இடையூறு செய்கிற வகையில் எந்தவித நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது. அமைதியான முறையிலும் கவனத்துடனும் வகுப்புகளைக் கவனிக்கவேண்டும்.

15. கல்லூரியில் காலையில் வகுப்புகள் ஆரம்பிக்கும் அடையாளமாக முதல் மணி ஒலிக்கும். 10 நிமிடங்களுக்குப் பிறகு இரண்டாவது மணி ஒலிக்கும். இந்த இடைப்பட்ட நேரத்திற்குள் மாணவ/மாணவியர் வகுப்பிற்குள் சென்றுவிட வேண்டும். இரண்டாவது மணி ஒலித்தவுடன் கல்லூரியின் நுழைவு வாயில் மூடப்படும். மீண்டும் மதியம் மட்டுமே நுழைவு வாயில் திறக்கப்படும்.

16. மாணவர்கள் கல்லூரிக்கு வரும்பொழுது காலர் வைத்த சட்டையை (Shirt) மட்டுமே அணிந்து வரவேண்டும். டீ-ஷர்ட், வாசகங்கள் தாங்கிய ஷர்ட், வேஷ்டி, மேல் துண்டு, ஜிப்பா, தொப்பி ஆகியவற்றை அணியக் கூடாது. காதில் கம்மல், கடுக்கன், கைகளில் பிரேஸ்லெட் மற்றும் வண்ணக் கயிறுகள் அணியக் கூடாது. தாடி, நீளமான கிருதா வைத்துக்கொள்ளக் கூடாது. தலைமுடியை பிளீச் (Bleach) செய்வதும் மற்றும் வண்ணம் பூசுவது (Hair Colouring) போன்றவற்றையும் செய்யக்கூடாது.

17. கல்லூரி வளாகத்திற்குள் மாணவ-மாணவியர் எக்காரணம் கொண்டும் செல்போன் கொண்டு வருதல் கூடாது. செல்போன் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் செல்போன் பறிமுதல் செய்யப்படும் அல்லது ரூ. 500/- இணக்கத் தொகை வசூலிக்கப்படும். இது தொடர்பாக முதல்வர் எடுக்கும் முடிவே இறுதியானது.

18. மாணவியர் சேலை, பாவாடை - தாவணி, மேலாடையுடன் கூடிய சுடிதார் மட்டுமே அணிந்து வரவேண்டும். உயரம் குறைவான (Short Tops) இறுக்கமான (Tight Fitting), உடல் தெரியும்படியான மெல்லிய (Transparent) ஆடைகள் அணிந்து வரக்கூடாது.

19. மாணவ / மாணவியர் கல்லூரியில் வழங்கப்பட்ட சீருடைகளை திங்கட்கிழமையன்று கட்டாயம் அணிந்து வர வேண்டும். சீருடையில் வரத்தவறினால் ரூ. 10/- இணக்கத் தொகை செலுத்த வேண்டும்.

20. மாணவ - மாணவியருடைய முன்னேற்றம் அல்லது ஒழுங்குப் பிரச்சினை தொடர்பாக கல்லூரி நிர்வாகம், முதல்வர் பேச அழைக்கும்போது பெற்றோர் / பாதுகாவலர் மட்டுமே முதல்வர் குறிப்பிட்ட தேதியில் தவறாமல் கல்லூரிக்கு நேரில் வருகைபுரிந்து சந்திக்க வேண்டும். வேறு எவரையும் பேச அழைத்துவரக்கூடாது.

21. கல்லூரி பேருந்தில் பயணம் செய்யும் பொழுதும், கல்லூரி வளாகத்தினுள், மாணவ - மாணவியர் கட்டாயம் அடையாள அட்டையை அணிந்திருக்க வேண்டும். அணியத் தவறினால் ரூ. 10/- அபராதம் செலுத்த வேண்டும். கல்லூரி வளாகத்தில் இருக்கும் எத்தருணத்திலும் அடையாள அட்டையைக் கழற்றக்கூடாது.

22. மாணவ / மாணவிகள், சக மாணவ / மாணவிகளுக்காகப் பேருந்தில் முன்னதாகவே இடம் ஒதுக்கி வைத்துக் கொள்ளக்கூடாது. பேருந்தில் பயணம் செய்யும் போது பொது மக்களுக்கு இடையூறு செய்தாலோ, கூச்சல், கையை காட்டி செய்கை செய்தாலோ அந்த மாணவ-மாணவியரை கண்டிப்பாக கல்லூரி பேருந்தில் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது.

23. மாணவ / மாணவிகள், பிற மாணவ / மாணவியரின் பிரச்சனையில் தலையிடக் கூடாது. அதை மீறி தலையிடும் பட்சத்தில் அந்த மாணவ / மாணவியரை தற்காலிக இடைநீக்கம் அல்லது நிரந்தர நீக்கமோ செய்ய முதல்வருக்கு முழு அதிகாரம் உண்டு.

24. மாணவ / மாணவிகள் தங்கள் வகுப்பு மாணவ - மாணவிகள் அல்லது பிற வகுப்பு மாணவ - மாணவிகளிடம் மற்றும் கல்லூரி பேருந்தில் எக்காரணம் கொண்டும் பணம் வசூல் செய்யக்கூடாது.

25. காலையில் கல்லூரித் தொடங்கி முடியும் வரை மாணவ / மாணவியர் கல்லூரி வளாகத்தைவிட்டு முதல்வரின் அனுமதியின்றி வெளியே செல்லக்கூடாது.

26. பாட நேரத்தில் வகுப்புகளை / கல்லூரியை விட்டு வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வகுப்புகளுக்குள் செல்லும்பொழுதும் முதல்வரின் அனுமதிச்சீட்டு பெற்றே செல்லவேண்டும்.

27. மாணவ / மாணவிகளுக்குத் தபால்கள், பார்சல்கள், தொலைப்பேசி அழைப்புகள் போன்றவை கல்லூரிக்கு வரக்கூடாது. (விடுதி மாணவர்கள் தவிர) மேலும் அவர்களின் தனிப்பட்ட தொடர்புகளுக்காகக் கல்லூரி முகவரியை எக்காரணத்தைக் கொண்டும் பயன்படுத்தக்கூடாது.

28. கல்லூரி வளாகத்தில் மட்டுமின்றி, கல்லூரிக்கு வெளியேயும் மாணவ / மாணவிகள் தங்களது நடத்தையின் மூலம் கல்லூரியின் நற்பெயருக்கும், புகழுக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது. மீறி தலையிடும் பட்சத்தில் அந்த மாணவ / மாணவியரை தற்காலிக இடைநீக்கம் (அ) நிரந்தர நீக்கமோ செய்ய முதல்வருக்கு அதிகாரம் உண்டு.

29. மாணவ / மாணவிகள் தங்கள் பெற்றோர் முகவரி மற்றும் தொலைப்பேசி எண்கள் மாறும்போது உடனடியாக முதல்வரிடம் அவற்றை எழுத்து வடிவில் தெரிவிக்க வேண்டும்.

30. மாணவ – மாணவியர் விடுதியில் தங்கிப் படிக்கும் காலத்தில் தங்களை மேம்படுத்திக் கொள்ள Diploma Courses, MBA, MCA, M.Tech, IAS, IPS போன்ற பாடங்களைப் படிக்கச் செல்லும்போதும், தங்களுக்குத் தேவைப்படும் Dress, Cosmetic Items, Book போன்ற பொருட்களை வாங்கச் செல்லும்போதும், Browsing Centre, Film, Hospital போன்ற இடங்களுக்குச் செல்லும்போதும் மற்றும் தங்களுடைய ஊருக்குச் செல்லும்போதும் அவரவர்களே தங்களைத் தற்காத்துக்கொள்ள வேண்டும். கல்லூரி வளாகத்திற்கு வெளியே நடைபெறும் நிகழ்வுகளுக்கு நிர்வாகம் எந்தவிதத்திலும் பொறுப்பேற்காது.

31. கல்லூரிக்கு வரும்பொழுதே மாணவ – மாணவியர் மதிய உணவைக் கொண்டுவருதல் வேண்டும். அல்லது கல்லூரி கேன்டீனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். எக்காரணம் கொண்டும் வெளியே சென்று சாப்பிட்டுவர அனுமதி கிடையாது.

32. கல்லூரி நிர்வாகத்திலும், விதிமுறைகளிலும் மாணவ – மாணவியர்கள் தலையிடுதல் கூடாது. கல்லூரி விதிமுறைகளை மீறினால் அம்மாணவ / மாணவியரைக் கல்லூரியைவிட்டு இடைநீக்கம் (Suspend) செய்ய அல்லது முழுமையாக நீக்கம் (Expel) செய்ய முதல்வருக்கு முழு அதிகாரம் உண்டு.

33. மாணவ / மாணவிகள் சக மாணவர்களை சாதி, மதம், இனம் போன்றவற்றைக் குறிப்பிட்டு பேச அனுமதி இல்லை.

| | |
|---|---|
| பெற்றோர் / பாதுகாவலர்<br>கையொப்பம் தேதியுடன் | மாணவர் / மாணவியர்<br>கையொப்பம் தேதியுடன் |

பெற்றோர் பெயர் :

முகவரி :

அஞ்சல் குறியீட்டு எண். :

தொலைப்பேசி எண் :